**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 181/2015** 13.12.2023

**PW1 –** மனோஜ்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

(சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்)

1. நான் இரண்டு சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முதல் இளக்கு சொத்து திருப்பூர் ஒடக்காடில் உள்ளது அதன் விஸ்தீரணம் 3286 1/2 சதுரடி. அதில் கட்டிடம்உள்ளது. அந்த சொத்து திருப்பூர் மாநகராட்சி எல்லையுள் உள்ளது. 2015 வழக்கு செய்த போது சொத்தின் மதிப்பு எனக்கு தெரியாது. 2வது இலக்க சொத்து ஒடக்காட்டில் தான்உள்ளது. அதன் விஸ்தீரணம் 2400 சதுரடி அதிலும் கட்டிடங்கள் உள்ளது. அதன் மதிப்பும் தெரியாது. முதல் இலக்க சொத்தின் பத்திரங்களை நான் பார்த்துள்ளேன். அந்த சொத்தை என்னுடைய அம்மாவின் அப்பா பீட்டர் என்பவரிடமிருந்து 1981 ல் வாங்கினார். என்னுடைய தாத்தா என்னுடைய பாட்டி பெயரில் 1வது இலக்க சொத்து குறித்து உயில் எழுதிவைத்துள்ளார். அந்த விவரம்நகல் எடுத்து பார்த்தபோதுதான்எனக்கு தெரியவந்தது. அந்த உயில்படி 1 இலக்க சொத்து உயில் எழுதிவைத்த வகையில் எனது பாட்டி கமலத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது பாட்டி 3 ம் பிரதிவாதி சித்தராவிற்கு 1வது இலக்க சொத்து சம்மந்தமாக ஒரு செட்டில்மென்ட் எழுதிவைத்தார் என்றால் சரிதான். 1வது இலக்க சொத்து 2வது இலக்க சொத்து தற்போது 3 வது பிரதிவாதி சித்திராவின் அனுபவத்திலிருந்து அதற்கான வாடகையும் வாங்கி வருகிறார் என்றால் சரியல்ல. வாடகையை மூன்று பிரதிவாதிகளும் சேர்த்து வாங்கி வருகிறார்.

2. முதல் மற்றும் இரண்டாவது இலக்க சொத்தில் எத்தனை வாடகைதாரர்கள் உள்ளார்கள் அவர்களுடைய பெயர்கள் என்ன என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த விவரங்கள் பிரதிவாதிகளுக்கு தான் தெரியும். ஒவ்வொரு வாடகைதாரரும் எவ்வளவு வாடகை செலுத்திகிறார்கள் என்ற விவரம் தெரியாது. 2 இலக்க

சொத்துக்களுக்கும் சித்தரா தான் தற்போதும் சுவாதீனத்தில் இருந்து வாடகை வசூலித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1 வது இலக்க சொத்திற்கு உரிய வீட்டு வரி தண்ணீர் வரி மின் கட்டண வரி 3 வது பிரதிவாதி சித்தரா பெயரில் தான் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் தாவா சொத்துகளுக்கு வரிகள் செலுத்தி வரி ரசீதுகள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் நாங்கள் இல்லாததால் தான்வரி ரசீது எதுவும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

3. முதல் இலக்க சொத்தை பொறுத்து எனது தாத்தா பழனிசாமி தன் மனைவி கமலத்திற்கு நல்ல மனநிலையில் இருக்கும் போது உயில் சாசனத்தை எழுதி பதிவு செய்து வைத்து இருக்கிறார் என்றால் சரியல்ல. அவர் கடந்த 24.4.2006 ம் தேதி இறந்த பின்பு அந்த உயில் சட்டப்படி அமலுக்கு வந்து அதன் அடிப்படையில் அவர்மனைவிக்கு பாத்தியப்பட்டு அவர் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. அதன் பின்பு பாட்டி கமலம் 1 வது இலக்க சொத்தை பொறுத்து ஒரு தான செட்டில்மென்ட் பத்திரத்தை 23.8.2007 ம் தேதி 3 ம் பிரதிவாதிக்கு பதிவு செய்துகொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த செட்டில்மென்ட் பத்திரத்தின் அடிப்படையில் 3 வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அதன் அடிப்படையில் அவர் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அதன் பேரில் 3 ம் பிரதிவாதி 1 வது இலக்க சொத்துக்கு உரிய வீட்டு வரி குடிநீர் மற்றும் மின் இணைப்பு வரிகளை அவர் பெருக்கு மாற்றி சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் போது எனக்கு 20 வயது. இவ்வழக்கு சம்மந்தமாக 2005 ல் நடைபெற்ற விசயங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் 2005 ம் வருடம் குழந்தையாக இருந்ததால் ஆவணங்கள் குறித்து எனக்கு தெரிந்து இருக்க வாய்பில்லை என்றால் சரியல்ல.

4. வழக்கு தாக்கல்செய்யும்போது குடும்ப விவரங்களை எனது பாட்டி எனக்கு சொன்னார். பாட்டி தான் 2 ம் வாதி ஆன எனது தம்பிக்கு பாதுகாவளராக இருந்து வழக்கு தாக்கல் செய்தார்.

(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– பா.செல்லதுரை.,
முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.